# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 17 புதன்கிழமை (01-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 184


# களுத்துறைச் சிறையில் டக்ளஸ் மீது தாக்குதல்!

## பின் கழுத்தில் ஆழமான குத்து நள்ளிரவில் சத்திரசிகிச்சை

கொழும்பு, ஜூலை 1

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகளின் நிலைமையை நேரில் பார்வையிடுவதற்காக அங்கு சென்ற ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா அங்குள்ள 'செல்' ஒன்றில் வைத்து தமிழ்க் கைதிகளால் நேற்று மாலை 6 மணியளவில் இரும்புக்கம்பி மற்றும் பொல்லுகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

படுகாயமடைந்த டக்ளஸ் தேவானந்தா தற்போது கொழும்பு பெரியாஸ்பத்திரியின் அதிவிசேட சிகிச்சைப் பிரிவில் தீவிர மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.



டக்ளஸ்

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருநூற்றியைம்பதுக்கும் அதிகமான தமிழ்க் கைதிகள் தங்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும்; அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருப்பது தெரிந்ததே.

இக்கைதிகளில் 54 பேர் நேற்று ஏழாவது நாளாக, சாகும் வரையான தமது உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்கைதிகளின் நிலைமையை நேரில் பார்வையிடுவதற்காக மனித கௌரவத்துக்கான அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம் சகிதம் டக்ளஸ் தேவானந்தா நேற்று களுத்துறைச் சிறைக்குச் சென்றார்.

டக்ளஸ் தேவானந்தாவின் மெய்ப்பாதுகாவலர்கள் சிறைக்குள் செல்ல அனுமதிக்கப்படாததை அடுத்து சட்டத்தரணி சகிதம் அவர் தனியாக சிறைக்குள் சென்றதாகக் கூறப்படுகின்றது.

அங்கு உண்ணாவிரதம் இருந்த கைதிகளை டக்ளஸ் தேவானந்தா முதலில் சந்தித்தார்; நீண்ட நேரம் அவர்களுடன் கலந்துரையாடினார்.

டக்ளஸ் தேவானந்தா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்புக் குழுவின் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பில் இன்று நடைபெறவிருந்த யாழ். மாவட்ட அபிவிருத்தித்திட்ட இணைப்புக் குழுக் கூட்டம் பெரும்பாலும் நடைபெறாது என்று யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் நேற்றிரவு தெரிவித்தார்.

இணைப்புக் குழுத்தலைவரான டக்ளஸ்தேவானந்தா களுத்துறை சிறைச்சாலையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்படலாம் என்று அவர் தெரிவித்தார். (உ-3)

## கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகள் நேற்று முதல் உண்ணாவிரதப் போர்

திருகோணமலை, ஜூலை 1

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பித்துள்ளனர்.

திருகோணமலைஉள்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாணக் கல்வியமைச்சு அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப்போராட்டத்தில் திருமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 150 பேர் பங்குபற்றினர்.

நேற்றுக்காலை 10-00மணியளவில் உண்ணாவிரதிகளை மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலால சந்தித்தார்.

ஆயிரம் பட்டதாரிகளுக்கு இருவாரங்களில் நியமனம் வழங்கப்படும் என்று அவர் அளித்த உறுதி மொழியை ஏற்க மறுத்த உண்ணாவிரதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடி தண்ணீர் கோரி உவர்மலையில் ஊர்வலம்

திருகோணமலை, ஜூலை 1

திருகோணமலை மாவட்டத்தில் உவர்மலைப் பகுதியில் வாழும் மக்கள் குடி தண்ணீர் வழங்கக்கோரி இன்று ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளவிருக்கின்றனர்.

உவர்மலைப் பகுதியில் நிலவும் குடி தண்ணீர்ப் பிரச்சினையை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி அப்பகுதியில் உள்ள சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் முடிவடையும். அங்கு மகஜர் ஒன்றைக் கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை, 1

தென்மராட்சிப் பிரிவில் வேழம்போக்கடி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் காலை 10, 30 மணியளவில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பலாலி இராணுவ தலைமையக செய்திக் குறிப்பு தெரிவித்தது.

படையினர் சிறு ஆயுதங்கள் கொண்டு பதில் தாக்குதல் நடத்தியதாகவும்-

இருபடையினர் காயம் அடைந்ததாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஈ. பி. டி. பியின் 3 உறுப்பினர்கள் வேலணையில்கைது?

யாழ்ப்பாணம், ஜூலை 1

வேலணையில் உள்ள ஈ.பி. டி. பி. அலுவலகத்தைச் சேர்ந்த மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக நேற்றிரவு கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது. ஈ. பி. டி. பி. உறுப்பினர் ஒருவர் தாக்குதலில் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கண்ணியில் சிக்கிய டிராக்டர்

தென்மராட்சிப் பிரிவில் வெற்றிலைக்கேணிப் பகுதியில் படையினர் சென்ற டிராக்டர் நேற்று முன்தினம் நண்பகல் ஒருமணியளவில் விடுதலைப் புலிகளின் கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கியதாக பலாலி இராணுவத் தலைமையக செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 2ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் மட்டுவிலில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஈ.பி.டி.பியின் அச்சுவேலி முகாமைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் மட்டுவில் வடக்கு, புத்தூர் — கனகன்புளியடிச் சந்தி வீதி. ஆயத்தடியில் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டனர்.

முறைப்பாடு ஒன்று குறித்து விசாரிப்பதற்காக புத்தூர் வாதரவத்தை வீதிப் பகுதியூடாகச் சென்று கொண்டிருந்த சமயம்நேற்று முன்தினம் முற்பகலில் இவர்கள் கடத்தப்பட்டதாகவும்—

நேற்று அதிகாலையில் கண்கள் துணியால் கட்டப்பட்ட நிலையில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும்— கூறப்படுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமுக்க வெடியில் சிக்கி படை டிராக்டர் சேதம்

### ஆனையிறவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை. 1

ஆனையிறவுப் பகுதியில் படையினரை ஏற்றிச்சென்ற டிராக்டர் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் அமுக்க வெடியில் சிக்கியதாக பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்ததாகவும்—

மூன்று படையினர் காயமடைந்து பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## யாழ். நீதிமன்றங்களை இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்தில் தற்போது செயலிழந்திருக்கும் நீதிமன்றங்களைச் செயற்பட வைப்பது குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் அரச உயர் பீடத்துடன் கலந்தாலோசித்துவருவதாகத் தெரிய வருகின்றது.

நீதியமைச்சு அதிகாரிகளுடன் அரச உயர்மட்டப் பிரமுகர்கள் தொடர்பு கொண்டிருப்பதாகவும் —

நீதி அமைச்சு அதிகாரிகள் இது குறித்து விரைவில் நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி சில முடிவுகளை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுபதாகவும்—

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பான இடங்களில் நீதிமன்றங்களை இயங்கச் செய்தல்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## தங்கரத்தினம் கந்தசாமி

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கரத்தினம்கந்தசாமி 30-6-98-ல் காலமானார். இவர் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் கந்தசாமியின் அருமை மனைவியாரும். திருக்குமாரி (ஆசிரியை, உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), அருணகிரிநாதன் (பாறெயின்) சந்திரகுமாரி (கனடா), ஆனந்தகுமாரி [ஜேர்மனி), அருட்சோதிநாதன் (திருகோணமலை புகையிரத நிலைய கட்டட பொறியியலாளர்), ஞானகுமாரி (கனடா), விஜயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், கணேசலிங்கம் (வங்கிச்சேவை முகாமையாளர் வலி-கிழ-தென்-பகுதி பல நோ. கூ. சங்கம்), சத்தியபாமா, பரமேஸ்வரன், சிறீஸ்கந்தராசா, புலனேந்திரன், சாந்தி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன் கிழமை (01 - 07 - 98) பிற்பகல் 2-00 மணியளவில் வண்ணார் பண்ணையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
அ. கந்தசாமி
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

15/2, சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (57269)

## திருமதி சோதிப்பிள்ளை ஐயம்பிள்ளை

சாவகச்சேரி பெரிய அரசடியைச்சேர்ந்த திருமதி சோதிப்பிள்ளை ஐயம்பிள்ளை கடந்த சனிக்கிழமை (27. 06. 98) இல் டென்மார்க்கில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற இளையதம்பி ஐயம்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், கிரிதரன் (நோர்வே), சிவபாலன் (டென்மார்க்), பரந்தாமன் (டென்மார்க்), கணநாதன் (நோர்வே), வாசுதேவன் (நோர்வே), சிவகுமாரன் (நோர்வே), திருமதி சிறிஸ்கந்தராசா கலாவதி (டென்மார்க்), திருமதி சிவதாசன் யசோதை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.

பிரேமராணி, அனுலா, லலிதாசக்தி, ஜெகதீஸ், ஜெயந்தி, அனுசியா, ஸ்ரீஸ்கந்தராசா, சிவதாசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மயூரன், மதுரன் செந்தூரன், பிரியன், பார்த்தீபன், மௌனி, சியாமளா, சங்கவி, ரம்மியா, ரமணன், சுமணன், பிரணவன், ஐங்கரன் ஆகியோரின் பாட்டியும். பரமநாதன், பூங்கோதை, சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30. 06. 98) பி. ப. 4. 00 மணிக்கு டென்மார்க்கில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. பரமநாதன்
(சகோதரன்)
(C.T.B)

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி. (சி/4147,

## திருமதி
## மனோன்மணி இராசலிங்கம்

''வசந்தம்'' மானிப்பாயைச் சேர்ந்த திருமதி மனோன்மணி இராசலிங்கம் அவர்கள் சனிக்கிழமை 27 — 06 — 1998 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம் நாகலிங்கம், ராசமணி நாகராசா, செல்வநாயகம், திரவியம் தியாகராஜா, திலகவதி நீதிராஜா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வே. கனகலிங்கம் பிள்ளை, சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வே. க. இராசலிங்கம் அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற சிவஞானம்பிகை, டாக்டர் சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பேரானந்தம், குணராசா (கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ்). துரைரட்ணம், புஷ்பம், பரஞ்சோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுந்தரம், சரஸ்வதி, விசாகப்பெருமாள், சுகிர்தலக்ஷ்மி, கிறிஸ்மி, பாஸ்கரசுந்தரம், அமுதவல்லி ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலாம்பிகை, ஆறுமுகம், பானுமதி, சிவகுமார், சிவயோகன், சுபாஷினி - ஹரிதரன், சுதர்சினி - ஷெரிப்டீன், லக்ஷ்மி விசாகானந்தி - பிரவீன்குமார், சுமங்களா, அனுஷியா, சிவானந்தராசா, செந்தில்ராசா, தபா, கஜனிமேவின் ஜோர்ஜ், சுகிர்தினி, நிசாந்தன், பாமினி, பாலகுமாரன், மயூரி, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இந்துவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 64, மெசஞ்சர் வீதி, கொழும்பு-12 இல்லத்திலிருந்து புதன்கிழமை 01-07-98 மாலை 5. 00 மணியளவில் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 5. 30 மணியளவில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ. குணராசா
(மகன்)

64, மெசஞ்சர் வீதி,
கொழும்பு —12
தொலைபேசி; 434703 (57263)

## செம்மணியில் மரணமானவர் மனநோயாளி

செம்மணிப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை படையினரின் சூட்டுக்கு பலியானவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

நீண்டகாலமாக மனநோயாளியாகவிருந்த சுந்தரலிங்கம் சிறிமோகன் (37) வயது என்பவரின் சடலமே என்று அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியதையடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-139)


நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்;
அகல வெண் திரையில்
01-07-98 மட்டும்
ரஜனி-நதியா -ராதா
நடித்த
ராஜாதிராஜா
(C. D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
2, 3, - 7 - 98
எம் ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ரகசிய பொலிஸ் 115
CD வெளியீடு
(57262)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
3 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
புதன், வியாழன்
ராஜேந்தர் - மைதிலி
நடித்த
மைதிலி என்னை
காதலி
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57176)

ஈசன்
திரை அரங்கு
சாவகச்சேரி.
25 அடி வெண் திரையில்
சரத்குமார் - கௌதமி
கவுண்டமணி, செந்தில்
ஆகியோர் இணைந்து
நடித்த
சிவந்த மலர்
இன்று மாலை ஆரம்பம்
புதிய நேரம் 3-30 மணி.
(சி/4148)

வெளிவந்துவிட்டது
98 இந்து நாகரிகம்
இந்து சமயம் வினா விடை
ஆசிரியர்:-
திரு. பத்மராஜா
H/C 2000 10 - 11 ] Sat.
Hin. 99 8 - 9
H/C 9 - 10 ] Sun.
விக்னா
கல்வி நிறுவனம்
(57267)

தொண்டர் ஆசிரியர்
சங்கம்
யாழ். மாவட்டம்
பொதுச் சபைக் கூட்டம்
காலம்:- 09-07-98 வியாழன்
இடம்:- D. M. I. கல்வி நிலையம்
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 10-00 மணி
விடயம்:- சங்கச் செயற்பாடுகள்விளக்கல்
(சி/4153) - தலைவர்

I. A. B. [LONDON]
DECEMBER - 1998
சகல பிரிவுகளுக்குமான
புதிய பயிற்சிகள் ஆரம்பமாகிவிட்டன.
இப் பயிற்சி முடிவில் C I. M. A. [LONDON]
பயிற்சி நெறிக்கு பதிவு செய்யலாம்.
விவரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL
INSTITUTE
2nd CROSS STREET, JAFFNA.
(C/4150)


# மரண அறிவித்தல்கள்

## கணேசபிள்ளை சச்சிதானந்தம்

(பிரபல வர்த்தகர்)

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும், 24/2, மதவடி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை சச்சிதானந்தம் 26-06-1998 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணேசபிள்ளை விசாலாட்சியின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற சரவணபவானந்தன் மற்றும் ஞானம்பிகை (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கிரிஜா (சுவிஸ்), உருத்திரன் (ஜேர்மனி), சுதன் (ஜேர்மனி), லோகன் (சுவிஸ்), பவானி (இலங்கை), கண்ணன் (பரிஸ்) அகியோரின் அன்புத் தந்தையாரும், கனகநாயகம், கிரிஜா நாகேந்திரலிங்கம், கவுரி ஆகியோரின் மாமனாரும், அனுஷா, ஆனந், அஜந், சிந்துஷா, பிரசாந், விதுரன, தர்ஸி, சதுர்ஸா, துஸ்ஸியா, தயாவின் பேரனும், லக்ஸனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-07-98) புதன்கிழமை பகல் 10-00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
மகேஸ்வரியும், பிள்ளைகளும்

24/2, மதவடிலேன்,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (57264)

## திருமதி முருகேசு இலச்சுமி

காரைநகர் களலிளிப்பிட்டியை பிறப்பிடமாகவும் தற்போது மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இலச்சுமி மல்லாவியில் காலமானார்.

இவர் முருகேசுவின் அன்பு மனைவியும், பரமுசரஸ்வதி, முருகேசு சுப்பிரமணியம், முருகேசு மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-6-98 செவ்வாய்க்கிழமை மல்லாவியில் நடைபெற்றன.

தகவல்
மு. மகேந்திரன்

களலிளிப்பிட்டி,
காரைநகர். (57252)

## சுப்பிரமணியம் நடராசா

நெல்லண்டை தங்காலைய வீதியைப் பிறப்பிடமாக கொண்ட சுப்பிரமணியம் நடராசா 30-6-98-ல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும்; பகவதியின் அன்புக் கணவரும், சிறீஸ்கந்தராசா, சற்குணராசா அருந்தவராசா, ராசமலர், சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்கா இன்று 1-7-98 காலை 10 மணிக்கு கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
சற்குணராசா
ஆபரணமாளிகை
பருத்தித்துறை

நெல்லண்டை
தும்பளை,
பருத்தித்துறை. (57270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் சட்ட ஒழுங்கு நல்ல நிலையில் உள்ளது

## கருணாநிதி தெரிவிப்பு

சென்னை ஜூலை 1

தமிழகத்தின் சட்டம், ஒழுங்குகள் எள்ளளவும் மீறப்படவில்லை. சிறப்பாகவே இருந்து வருகிறது.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று செய்தியாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

உத்தரப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர் அஸாம் ஆகிய பகுதிகளை தமிழகத்தோடு ஒப்பிடும் போது அம்மாநிலங்களில் சட்டம், ஒழுங்குகள் மீறப்படுவதை காணக் கூடியதாக உள்ளது.

தி. மு. க. ஆட்சி விடயங்களில் பாரதீய ஜனதாக் கட்சி தர்ம நியாயம் பற்றி சிந்திக்காது இருப்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருவதாக இருக்கின்றது என்றும் கருணாநிதி கூறினார்.

மத்திய குழு ஒன்று மீண்டும் மாநிலத்திற்கு வந்தால் மாநில அரசின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என்ற செய்தியாளர் கேள்விக்கு கருணாநிதி பதில் அளிக்கையில் மாநிலத்தின் விருப்பத்துக்கு ஏற்பத்தான் மத்திய குழு அமைய வேண்டும். இது மத்திய—மாநில நல்லுறவை வளர்க்கவும் கூட்டாட்சி தத்துவம் என்ற இலக்கணத்திற்கும்பொருத்தமாக இருக்கும் என்றார்.

மத்தியில் மாற்று ஆட்சி ஏற்பட்டால் ஐக்கிய முன்னணியின் நிலை என்ன என்ற கோள்விக்குப் பதிலளிக்கையில் அது ஐக்கிய முன்னணி கூட்டத்தில் விவாதிக்சப்பட்டு முடிவெடுக்கப்படும் என்றார் கருணாநிதி.

எந்த ஓர் ஆட்சியாக இருந்தாலும் அது முழுமையாகத் தான். இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்காக எடுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று சருணாநிதி கூறினார்.

எனினும் நாடாளுமன்ற தேர்தலகள் விரைவில் நடைபெறும் என தான் முன்பு அறிவித்ததில் மாற்றம் வராது எனவும் அவர் கூறினார்.

தி. மு. க. அரசை கலைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை அ. தி. மு. க கூட்டணி கட்சிகள் விடுத்ததை கருத்திற் கொண்டே கருணாநிதி இவற்றைக் கூறினார்.

(இ-ரி)

# லண்டன் தேயிலை ஏல நிலையத்துக்கு மூடுவிழா

லண்டன், ஜூலை 1

இந்தியா, இலங்கை, கென்யா உட்பட பல நாடுகளின் தேயிலை வகைகளுக்கான விலைகளை நிர்ணயிக்கும் லண்டன் "தி ஒக்சன்" என்ற ஏல நிறுவனம் நேற்று முன் தினம் முதல் வர்த்தகம் செய்வதை நிறுத்திக் கொண்டு விட்டது.

பிரிட்டனின் மிகப் பழைமையான நிறுவனமான இந்த நிறுவனம் 300 ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸில் நிறுவப்பட்டது.

தற்போது இன்ரர்நெட் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் இலகுவாக்கப்பட்டதை அடுத்தே நிறுவனம் மூடப்பட்டது.

(இ-ரி)





மிளகாய்ப் பயிரில் இலைச்சுருள் சிக்கலை ஏற்படுத்தும் பனிப்பூச்சிகள், ஏப்பிட்டுகள், வெண்ணீக்கள் சிற்றுண்ணிகள் என்பவற்றை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும்

**செலிக்றோன்**

( ப்றோ.: பெனோ.: பொஸ் 500 லீ. )

**லங்கெம் விவசாயிகளின் தோழன்**

யாழ்ப்பாணத்தில் ஏக விநியோகஸ்தர்கள்:

**இராஜலெட்சுமி ஸ்ரோர்ஸ்**

150, K. K. S. றோட், யாழ்ப்பாணம்.

**லங்கெம் சிலோன் லிமிட்டெட்**

No. 760, பேஸ்லைன் வீதி,
கொழும்பு - 09.

698292 - 4 -

(பீடை நாசனிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும்)

(சி-4149)


# பழங்குடி மக்கள் ஏமனில் கிளர்ச்சி

லண்டன், ஜூலை 1

பொருள்களின் விலை உயர்வைத் தொடர்ந்து ஏமனில் உள்ள பழங்குடி மக்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

அரச துருப்புகளுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் இதுவரை 50 பேர் உயிரிழந்ததுடன் 200 பேர் வரை காயமடைந்தனர்.

அரச தரப்பில் 25 பேர் உயிரிழந்தனர். கிழக்கு ஏமனில் இருந்து செங்கடலுக்கு மசகுஎண்ணெயைக் கொண்டு செல்லும் குழாயை ஆவேசம் கொண்ட பழங்குடியினர் உடைத்துள்ளனர்.

இதன்காரணமாக அரேபிய நாடான ஏமனில் பதற்ற நிலை நிலவுகிறது. (இ-ரி)

# லாகூரில் குண்டு வெடிப்பு பத்துப் பேர் காயம்

இஸ்லாமபாத், ஜூலை 1

பாகிஸ்தானின் லாகூர் நகரில் மரக்கறிச் சந்தை ஒன்றில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் பத்துப் பேர் காயம் அடைந்தனர்.

மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

குண்டு வெடிப்புக்கு எந்த ஓர் அமைப்பும் உரிமை கோரவில்லை. புலனாய்வுத்துறை துப்புத் துலக்கி வருகிறது.

# தெற்காசியாவில் பதற்றம் குறைக்க அமெ. முயற்சி

அண்மையில் நடைபெற்ற இந்திய — பாகிஸ்தானிய அணு வெடிச்சோதனைகளின் பின் தெற்காசியப் பிரதேசத்தில் எழுந்துள்ள பதற்ற நிலைமையை குறைக்கும் முயற்சியில் அமெரிக்கா

**உலக அரங்கில்**

ஆர்வம் காட்டி வருகிறது.

பாகிஸ்தானின் தோழமை நாடுகளில் ஒன்றாகவும் —

பாகிஸ்தானுக்கு ஆயுத தொழில் நுட்பத்தை வழங்கிய நாடாகவும் —

தற்போது அணு வெடிச் சோதனைகளுக்கான தொழில் நுட்பத்தையும் வழங்கியுள்ள நாடாகவும் — சீனா கருதப்படுகின்றது.

சீனா 1996 இல் கடைசியாக மேற்கொண்ட அணுச் சோதனையை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டதை அடுத்தே பில்கிளின்ரன் சீனப் பயணத்தை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-ரி)

## மாலைதீவின் ஜனாதிபதி இந்தியா விஜயம்

புதுடில்லி, ஜூலை 1

மாலைதீவு அதிபர் கையூம் இருநாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று புதுடில்லி வந்தார்.

கையூம் இந்திய தலைவர்கள் பலரைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

இரு தரப்பு பிராந்திய நடவடிக்கைகள், நடைபெற உள்ள சார்க் உச்சி மாநாடு, மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்தும் கையூம் உரையாடவுள்ளார்.

# கொசோவோவில் மேலும் சில இடங்கள் சேர்பிய படைகள் வசம்

திரானா, ஜூலை 1

கொசொவோவில் சேர்பியப்படைகள் மேலும் பல பகுதிகளை ஆக்கிரமித்துள்ளன.

போரை நிறுத்த மேற்கொண்ட சமரசப் பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ள நிலையில் தலைநகர் பிரஸ்டினாவுக்கு 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுரங்க நகரான மிலாச்சுவாவில் சேர்பியப் படைகள் நேற்று முன்தினம் ஆகாய மற்றும் தரைத் தாக்குதல்களை நடத்தி இப் பகுதியைக் கைப்பற்றின.

இந் நடவடிக்கையின் போது பல கட்டடங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டன. (இ-ரி)

# யாழ்.வாசிகள் என உறுதியான பின்பே அகதிகள் அழைத்து வரப்படுவார்கள்

## கப்பல் மூலம் வருவோருக்கு புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 1

மன்னாரில் தங்கியுள்ள அகதிகளை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு முன்னர் அவர்கள் உண்மையாகவே யாழ். வாசிகளா? என்பதை அறிய மன்னார் மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பொருட்டு பேசாலை அகதி முகாம் உட்பட மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ள யாழ். அகதிகளின் பெயர் மற்றும் குடும்ப விவரங்கள் யாழ். குடா நாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு மன்னார் மாவட்ட செயலகத்தினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலகர்களும் கிராம அலுவலர்களின் உதவியுடன் குடும்ப விவரங்கள் பற்றிய தகவல்களைப் பெற்று உண்மையாகவே தத்தமது பிரிவில் வசிப்பவர்கள் என உறுதிப்படுத்தினால் மட்டுமே அகதிகள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-7)

## அன்னதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்களுக்கு நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து நயினாதீவுக்கு விஜயம் செய்யும் அடியவர்கள் ... சுற்றாடலில் தங்கியிருக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு பரீட்சை

யாழ். பல்கலைக்கழகத்தில் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ள இரண்டு வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு மாணவர்களைச்சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்திலும், பொருளியல் மண்டபத்திலும் நடைபெறும்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களை எதிர்வரும் 6ஆம் திகதியிலிருந்து அனுமதி அட்டைகளைப் பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தால் முதன் முதலாக இக் கற்கைநெறி ஆரம்பிக்கப் படவுள்ளது.

சுமார் 200 பேர் வரை இக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்துள்ளனர். (இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

ஆபிரிக்க லவ்பேட்ஸ் மஞ்சள், சொண்டு சிவப்பு நிற முடையவை கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 20, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

[57215]

### திருத்துதல்

பழைய இசைக்கருவிகள் வாங்குவதற்கும் விற்பதற்கும் பியானோ உட்பட எல்லா இசைக் கருவிகளையும் திருத்தம் செய்வதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். T. கணேசன் 261/7, கண்டி றோட், யாழ்ப்பாணம்.. (தியாகராசா படிப்பகத்துக்கு அருகில்.)

[57251]

### உடன்விற்பனைக்கு

பிறிமா புறொயிலர் ஒரு நாள் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பதிவுசெய்தோரும் மற்றும் தேவைப்படுவோரும் வந்து பெற்றுக் கொள்ளவும். மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

[57211]

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சிவன் கோயில் முகப்பு வீதியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. வேலாயுதம் சட்டத்தரணி, சாவகச்சேரி.

[சி/4145]

### திருமணசேவை

எங்கள் அலுவலகம் இப்போது சியாமளா மில் புத்தூர்ச் சந்தியில் இயங்குகின்றது. எங்களிடம் அரச தொழில், தனியார் தொழில் வெளிநாடு ஆகியோர்களின் சாதகங்கள் உண்டு. வே. புண்ணியமூர்த்தி, எம். ஜி. ஆர். அகம் கண்டி வீதி, புத்தூர்ச்சந்தி, மீசாலை.

[57253]

### தவறிவிட்டது

விஜயகுமாரி இராசலிங்கம் என்பவரின் தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் பஸ் நிலையத்துக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பலாலி றோட், பெற்றோல் நிலையம் உரும்பிராயில் ஒப்படைக்கவும்.

[57255]

### தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் & மொழி பெயர்பாளர் உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி தயாபரன் 140, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

[57256]


## வசதி குறைந்த மக்களுக்கு உதவ திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் தேவைகளை இனம் காணும் நடவடிக்கைகளில் ஐ! நா, அபிவிருத்தித் திட்டம் (யு. என். டி. பி.) உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் இணைந்து ஈடுபட்டு வருகிறது:

உடுவில், வடமராட்சி தென்மேற்கு, பருத்தித்துறைபகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக்கேட்டறிந்த இவர்கள் வலிகாமம் கிழக்குப் பகுதிக்கும் விஜயம் செய்தனர்.

(இ-5)

## திருநகர் பகுதியில் மேலும் 50 குடும்பங்களுக்கு நிதி

கொழும்புத்துறை, ஜூலை 1

யாழ். திருநகர் ஜே - 67 கிராமசேவகர் பிரிவில் 6 ஆவது தடவையாக மேலும் ஐம்பது குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு பணம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்தப்பணத்தைப் பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் இப்பகுதிக் கிராமசேவையாளர் பணிமனையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பட்டியலில் பெயர்கள் உள்ளோர் தங்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை, வங்கிப்புத்தகம், ரூபா 5 பெறுமதியான முத்திரை ஆகியவற்றுடன் அலுவலக நேரத்தில் தம்மை நேரில் சந்திக்குமாறு இப்பகுதிக் கிராமசேவகர் ஜே. என். பி. பாக்கியராஜா தெரிவித்துள்ளார். (இ-30)

## நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம், ஜூலை 1

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக நிதிக்காக வேழம்படுத்த வீராங்கனை ஆட்ட நாட்டுக்கூத்து எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கும் என இரண்டு காட்சிகள் இடம் பெறவுள்ளன. (இ-ரி)

## இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், ஐ. நா. அபிவிருத்தி திட்டம் (யு. என். டி. பி.) வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து இளைஞர்களுக்கான தொழிற்றிறன் பயிற்சித் திட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

இப்பயிற்சிப் திட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி திருத்துதல், கட்டடங்களுக்கான மின் இணைப்பு, பெண்களுக்கான ஆடை தயாரித்தல் போன்ற துறைகளில் பயிற்சி நெறிகள் நடத்தப்படும்.

யாழ்- மாவட்டத்தில் 14 பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறிகளில் 480 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறும் பயிற்சி நெறியின் பின்னர் பயிற்சியாளர்களுக்கான மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஊக்குவிப்பு வழங்கப்படும்.

சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கான உதவிகளைப் பெறும் பொருட்டு யாழ். மாவட்டத்திலுள்ள நிதி நிறுவனங்களின் வளங்கள் பயன்படுத்தப்படும் என்று தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார். (இ-5)

### மழையினால்

## பம்பாய் வெங்காயம் பெரும் அளவு அழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

கடந்த ஏப்ரலில் பெய்த மழையினால் 11 ஹெக்டேயர் பம்பாய் வெங்காயம் அழிந்துள்ளதாக விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அராலிப் பகுதியிலே கூடுதலான பம்பாய் வெங்காயம் இந்த மழையினால் அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் கடந்த சிறு போகத்தில் 26 ஹெக்டேயரில் பம்பாய் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-6-5)




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

அம்பிகையைத் தரிசிப்பதற்காக வருகை தரும் அடியார்களுக்கு ஆலய வீதியில் அமைந்திருக்கும் கல்யாண மண்டபத்தில் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு அறங்காவலர் சபை தீர்மானித்துள்ளது. இந்த அன்னதானப் பணியில் பங்கு கொள்ள விரும்பிப் பலர் விண்ணப்பம் செய்துள்ளனர். இதில் பங்கு கொள்ள விரும்பும் ஒருவர் தாம் விரும்பும் நாளொன்றிற்கு (ஆங்கிலத் திகதி) (5000/-) ஐயாயிரம் ரூபாவை ஒருமுறை மட்டும் செலுத்தினால் போதும். அவரின் பெயரால் ஆண்டுதோறும், குறிப்பிட்ட திகதியில் அன்னதானம் தொடர்ந்து வழங்கப்படும். இப்பணியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் முதலில் தமது விருப்பத்திற்குரிய தினத்தைப் பதிந்து கொள்ளவும். பணத்தை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியின் **12330** கணக்கு இலக்கத்தில் அல்லது கொழும்பு, புறக்கோட்டையில் உள்ள வர்த்தக வங்கியின் **01 - 2426285 - 01** இலக்க கணக்கில் வைப்பிலிடலாம். அல்லது பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்ற முகவரிக்கு காசோலையாகவும், காசுக் கட்டளை மூலமும் அனுப்பி வைக்கலாம். இத்திட்டத்தில் சொற்ப வெற்றிடம் மட்டுமே இருப்பதால் இயலக் கூடியளவு விரைவில் பதிவுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(57186)


### 6 மாதங்கள் கழிந்தும்

## பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நிதி இன்னும் வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேசசெயலர்பிரிவுகளுக்கு இந்த வருடத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரமாண அடிப்படையிலான நிதி ஆறு மாதங்கள் கழிந்தும் இதுவரை வடக்குகிழக்குமாகாண அமைச்சினால் அனுப்பி வைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட உடனேயே பிரதேச செயலகங்களுக்கு நிதி அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சோ 1998 ஆம் ஆண்டுக்கான நிதியை ஆறு மாதங்கள் முடிந்தும் யாழ். மாவட்டத்திற்கு இதுவரை அனுப்பிவைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பிரமாண அடிப்படையிலான நிதியைப் பெறுவதற்காக யாழ், மாவட்ட பிரதேச செயலகங்கள் கடந்த ஆண்டின் இறுதியில் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் பற்றியும், அவற்றுக்கான செலவினங்கள் குறித்தும்வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சுக்கு அனுப்பி இருந்தன.

ஆனால் இதுவரை நிதி வந்து சேரவில்லை. இதனால் ஏற்கனவே திட்டமிட்ட வேலைகளைக் கூட செய்ய முடியாமல் இருப்பதாகவும்– காலம் தாழ்த்தி நிதி அனுப்பப்படுவதனாலே குறுகிய காலத்துக்குள் பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும் எனவும் பிரதேச செயலகங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணசபை கடந்த வருடமும் மாகாண அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பல லட்சம் ரூபாவை பயன்படுத்தாது திருப்பி அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



## நாடகவிழா ஒத்திவைப்பு

ஆரம்ப பிரிவுக்கல்வி அபிவிருத்திச்சங்கம் ஜூலை 3 ஆம், 4 ஆம், 5 ஆம் தினங்களில் நடத்தவிருந்த நாடகவிழா எதிர்வரும் ஆகஸ்ட் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் தினங்களில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆரம்ப பிரிவுக்கல்வி அபிவிருத்திச் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(57257)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் சி. கணேசலிங்கம்

(கணேஸ் மாமா)

(படப்பிடிப்பாளர், வாணி வீடியோ ஹோம் V. V. T.)

அன்னை மடியில் **29 - 04 - 1961**

ஆறாத் துயரில் **02 - 06 - 1998**

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய்!
என்னுள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவா
அலை போல் ஒலிக்கின்ற அரிஹர நாமமே
என்றும் எம்மை அரவணைத்த அணையாத தீபமே
மொட்டுக்கள் முகிழும் போது மோத வைத்ததுவே!
மோட்டார் சைக்கிளில் வந்ததுவோ காலனவன்
மொட்டையாக்கி விட்டதுவே காதலின்கானகத்தை
மோட்சம் சென்றாயோ இப்புவிதனை விட்டு
நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
உம் நினைவுகள் முள்ளாய்த் தைக்குதுவே!

02 - 07 - 98 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், அன்றைய தினம் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், தாய்.

செல்வம் மில் லேன்,
இமையாணன்,
உடுப்பிட்டி.

(57254)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகத்தில் 1,110 ஹெக்டரில் விவசாயப் பயிர்கள் செய்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

கடந்த சிறு போகத்தில் யாழ். மாவட்டத்தில் வெங்காயம், குரக்கன், மிளகாய், பயறு, மரக்கறி வகைகள், கிழங்கு வகைகள் உட்பட ஆயிரத்து 110 ஹெக்டரில் விவசாயப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டதாக விவசாய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பயிர்களும் அவை செய்கை பண்ணப்பட்ட விஸ்தீரணமும் பற்றிய விவரங்கள் விவசாயத் திணைக்கள அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டன.

அவற்றின் விவரம் வருமாறு:—

மிளகாய் 25 ஹெக்டர், பெரிய வெங்காயம் 26 ஹெக்டர். சின்ன வெங்காயம் 300 ஹெக்டர். குரக்கன் 15 ஹெக்டர், பயறு 103 ஹெக்டர், மரவள்ளி 103 ஹெக்டர், மரக்கறி 382 ஹெக்டர், வேறு கிழங்கு வகைகள் 156 ஹெக்டர். (இ-6-5)

## வாந்திபேதி பரவுவதை தடுப்பதற்கு நடவடிக்கை

வவுனியா, ஜூலை 1

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாந்திபேதி பரவாமல் தடுப்பதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் பரவிவரும் வாந்திபேதிநோய் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்துக்கும் பரவாமல் இருப்பதற்காக முன்னேற்பாடு நடவடிக்கைகளை சுகாதாரப் பகுதியினர் எடுத்துள்ளனர்.

முன்னேற்பாடு நடவடிக்கையாக அறிவுறுத்தல்களை மக்களுக்கு பகிரங்கமாக விடுத்துள்ள சுகாதாரப்பகுதியினர் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு அவை தொடர்பான விளக்கங்களையும் அளித்து வருகின்றனர்.

வாந்திபேதி நோய் தொடர்பான அறிகுறிகாணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் செல்லுமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். [இ-3]

## கட்டட வசதியிருந்தும் வேறு இடத்தில் இயங்கும் திறந்த பல்கலை நிலையம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம், யாழ். தொழில்நுட்பகல்லூரிவளவில் கட்டட வசதி இருந்தும் தற்போது வேறொரு இடத்தில் இயங்கி வருகிறது.

தொழில் நுட்பக் கல்லூரியின் தெற்குப்புறத்தில் தனியான கட்டடத்தில் இந் நிலையம் முன்பு இயங்கி வந்தது

பின்னர் நடந்த சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியில் சிறு பகுதி ஒன்றில் இது இயங்கி வருகிறது.

தொழில் நுட்பக் கல்லூரி வளவில் உள்ள திறந்த பல்கலைக்கழக கட்டடப் பகுதியைச் சூழ தற்போது மரங்கள் வளர்ந்து அடர்ந்து காணப்படுகின்றன. அலுவலக உபகரணங்கள் யாவும் கறையான்பிடித்து அழிந்துபோகும் நிலையை அடைந்து விட்டன.

எனினும் திறந்தபல்கலைக்கழகம் மீண்டும் பழையஇடத்தில் இயங்காமைக்கு அப்பகுதியில் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் மிதிவெடிகள் காரணமாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை தொழில் நுட்பக் கல்லூரி மீண்டும் இயங்குவதும், நூற்றுக்கணக்கான மாணவர்கள், விரிவுரையாளர்கள் அங்கு நாள்தோறும் வந்து செல்வதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தைப் பகிஷ்கரிப்பர்

வவுனியா, ஜூலை 1

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தை ப. நோ. கூ. சங்கத்தலைவர்கள், அரச சார்பற்ற தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தை வெட்டியதைக் கண்டித்தும் —

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கு அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றி வரும் லொறிகளுக்கு வவுனியாவில் வரி அறவிடப்படுவதைக் கண்டித்தும் — இந்தப்பகிஷ்கரிப்பை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் நடந்த் கூட்டத்தில் பங்குபற்றிய அவர்கள் மேற்படி இருகாரணங்களுக்காகவும் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்து சபையில் இருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-164-3]


## மின் பாவனையாளர் கவனத்துக்கு

எதிர்வரும் ஆவணி மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உ/த) வகுப்பு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி 01 - 07 - 1998 தொடக்கம் 26 - 08 - 1998 வரை மின்சாரம் வழங்கும் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாலை 7 மணி தொடக்கம் நடு இரவு 12-30 மணி வரையும் அதிகாலை 4-30 மணி தொடக்கம் காலை 6-30 மணி வரையும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. எனவே இக்காலப் பகுதியில் ஆகக் குறைந்தளவு மின்சாரத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் படிப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு உங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இலங்கை மின்சார சபை,
சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு
கைகொடுக்கும்,
இலங்கை மின்சார சபை.

மின் பொறியியலாளர்,
இ. மி. ச.,
யாழ். பிரதேச அலுவலகம்,
125, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4146)


## நியமனம்

நெடுந்தீவு, ஜூலை 1

வேலணை பல. நோ. கூ. சங்கத்தின் தலைவராக எஸ். திசைநாயகம் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-111)

## பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கை— ஜேர்மன் சேபேநிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியின்மை பயிற்சிநெறி யாழ். பல்கலைக்கழக சிற்றிஹோலில் ஆரம்பமாகி உள்ளது.

தொடர்ந்து பதினைந்து னங்கள் நடைபெறும் இப் பயிற்சி நெறியில் தெரிவு செய்யப்பட்ட 30 பயிற்சியாளர்கள் பங்கு பற்றுகின்றனர். (இ-5)

## லியோ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

மாவட்டம் 306பி, பிராந்தியம் 8 லியோக் கழகங்களின் கருத்தரங்கு அண்மையில் மாவட்ட லியோத் தலைவர் லயன் பா. தவபாலன் தலைமையில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் யாழ். இந்துக்கல்லூரியினால் வேலணை பிரதேச சபையின் கீழ் இயங்கும் புங்குடுதீவு முன்பள்ளிக்கு ஒரு தொகுதி உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதனையும் யாழ். இந்துக் கல்லூரிக்கென வழங்கப்பட்ட சுழற்சிமுறை வெற்றிக் கிண்ணத்தையும் விழா பிரதம விருந்தினரும், பிராந்தியம் 8 இன் தலைவரும் ஆகிய லயன் வி. தில்லைநாதன் வழங்கினார்.

விழாவில் யாழ். இந்துக் கல்லூரிலியோகழகத்தினால் இலவச வெளியீடாக 'மிரட்டும் மிதி வெடிகள்' என்ற துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. (இ-ரீ)

## தளபாடங்கள் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்துக்கென 40 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் கொழும்பிலுள்ள அரச வர்த்தக கூட்டுத் தாபனத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தளபாடங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

தொழில்நுட்ப நிறுவனத்துக்கு இந்தத் தளபாடங்கள் வந்து சேர்ந்ததும் நிறுவன நூல் நிலையத்திலும் விரிவுரை வகுப்புக்களிலும் நிலவும் தளபாடப் பற்றாக் குறை தீர்ந்து விடும் என பணிப்பாளர் இராஜரத்தினம் தெரிவித்தார். (இ-5)

### தேர்தல் காலத்தில்

## எம்.பிக்களின் பொலீஸ் பாதுகாப்பு வாபஸாகும்!

கொழும்பு, ஜூலை 1

மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலீஸ் பாதுகாப்பை வாபஸ்பெறத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலீஸார் அக்கடமையில் இருந்து விடுவிக்கப்படவுள்ளனர்.

தேர்தல் பாதுகாப்புக்கு பெரும் எண்ணிக்கையான பொலீஸார் பணியில் ஈடுபடுத்தத் தேவைப்படுவதாகப் பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ-21)


## MODERN LONDON STAR

COMPUTER TRAINING DIVISION

Bank Lane, Chavakachcheri

எமது நிறுவனம் 28 - 06 - 98 முதல் தனது சேவைகளை ஆரம்பித்துள்ளதென்பதை அறியத் தருகின்றோம்.

1) Diploma in Software Engineering (காலம் - 6 மாதம்)
2) Diploma in Windows Applications. (காலம் – 6 மாதம்)
3) Certificate in Desktop Publishing (காலம் - 3 மாதம்)

மேற்படி கல்வி நெறிகள் 10 - 07 - 98 முதல் ஆரம்பமாகவுள்ளதால் இவற்றிற்கான விவரங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- அலுவலகங்களில் பணிபுரிவோருக்கான பிரத்தியேக வகுப்புகளும் (சனி/ஞாயிறு) ஆரம்பமாகவுள்ளன.

ஏனைய சேவைகளாக,

1) Laser அச்சுப்பிரதி (கணனி மூலம்)
2) போட்டோ Scanning
3) போட்டோ பிரதிகள்
4) கவரிடுதல்

ஆகியவை மேற் கொள்ளப்படும்.

- நிர்வாகி

(57239)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 22 — 05 — 1947

மறைவு 02 — 06 — 1998

திருமதி
### புனிதவதி செல்வராஜா

பண்போடு பாசமும்
பல்கலையும் தந்தவள்
உற்றாரும் சுற்றாரும்
போற்றிடவே வாழ்ந்தவள்
பாரிலில்லை என்றாலும்
பார்த்திடுவள் பரிவுடன்
நிலையில்லாத உலகினில்
அவள் நினைவுகள் மட்டும்
ப பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம் இல்லத்தில் ஒளிர்விட்ட புனிதமே
நோயின் பிடியில் சிக்கி
காலன் கண்ணில் பட்டுஎமையெல்லாம்
விட்டுச் சென்றதேனோ?

இறைவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளையில் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், உதவிகள் செய்தோருக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை 02 – 07 – 98 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், சகோதரி.

பாடசாலை வீதி,
வதிரி,
கரவெட்டி.

(37228)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

BOND பரீட்சைப்பகுதி
நடத்தும்

## பயிற்சிப் பரீட்சை

**G. C. E. [A/L] 98**

02 - 07 - 98 இல் ஆரம்பமாகும்.

(நாடு முழுவதிலும்)
நேரசூசி அலுவலகத்தில் பெறலாம்.

**BOND** யாழ். நகர். (57219)



## தேவை

தொலைத் தொடர்பு சேவையில் வேலை செய்வதற்கு ஆங்கில அறிவுடைய பெண் தேவை. காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நேரில் வரவும்.

த. சங்கரப்பிள்ளை & சன்ஸ்
21, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(57233)


## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 23 — 10 — 1926

ஆண்டவன் அடியில் 01 — 07 — 1986

### அமரர் சி. அழகரத்தினம்


(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

பன்னிரு ஆண்டுகளாய்ப் பாரினிலே நாங்கள்
கண்ணீரும் கம்பலையும் மாறாதே வாழ்கின்றோம்
தண்ணளி யால் ஒளி பெருக்கும் தண்மதியே!
விண்ணுயர்ந்த மேலவனே மண்ணிறங்கி வாராயோ?
முன்னவனே முழுநிதியே மன்னவனே யெங்கள்
கண்ணீரைத் துடைத்திடவே யுன்கரங்கள் நீளாவோ?

என்றும் நினைந்து வாடும்
மனைவி, மைந்தர்.

சுதுமலை தெற்கு.
மானிப்பாய். (57092)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற முதலியார்)

தோற்றம் 23—08—1918

மறைவு 01—06—1998

தாங்குதல் தானே யன்றி தாங்குதல் யார்க்கும் வேண்டாமென
தாங்கியே வாழ்ந்தீர் தலைமுறைகள் யாவையும் தர்மசீலரே!
தாங்கும் வேர்களாய் நாமிருந்தும் தனிமரமாய் தாங்கி நின்றெமை
தாங்கி தலைநிமிர வைத்தவரே! நின் ஆன்மா சாந்தியடைக எனப் பிரார்த்திக்கும்

8 ஆம் கட்டை,
மல்லாகம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(57234)

## ஆயுதபாணிகளால் பதற்றம்

வவுனியா, ஜூலை 1

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இனந்தெரியாத ஆயுதபாணிகள் சிலர் திடீரென நடமாடியதை அடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

காலை 6 30 மணியளவில் ஆயுத பாணிகள் சிலர் பிரதான வீதியின் கிழக்குப் பகுதியில் இருந்து வீதியைக் கடந்து மேற்குப் பகுதிக்குள் ஊடுருவிச் செல்ல முற்பட்டனர். அதனை அவதானித்த படையினர் ஆயுதபாணிகளைத் துரத்திச் சென்றதாகவும் —

அச்சமயம் ஈரப்பெரிய குளத்தில் பாஸ் எடுப்பதற்காக நின்ற பயணிகள் அதனால் பதற்றமடைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-164)

## மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அரச ஊழியர்கள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கான மிதி வெடிகள் விழிப்புணர்வு கருத்தரங்கினை யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவ துறையினரும் யூனிசெவ் நிறுவனமும் இணைந்து நடத்தவுள்ளன.

இக்கருத்தரங்கு இம்மாதம் 3 ஆம் 4 ஆம் திகதிகளில் மேற்படி பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் டாக்டர் என். சிவராஜா, டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவார்கள். (இ-6-5)


தூரிகை

தூரிகையின்
" அரும்புகள் "

ஓவியக் கண்காட்சியைத் தொடர்ந்து அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

" சித்திரக்கலை "
"Fabric Painting"

▶ புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

04-07-98 (சனி)
காலை 9 மணி

**தூரிகை**
நுண்கலை வளாகம்,
சட்டநாதர் வீதி,
நல்லூர்.
(57230)



**நியூசயன்ஸ் அக்கடமி**
நல்லூர்

99 A/L
புதிய பிரிவு
கணக்கீடு

திரு. பாலவாசன்
02-07-98 6.30 A.M.
(57250)



யாழ். குடாநாட்டு வாடிக்கையாளர்களுக்கு

## ஒரு முக்கிய அறிவித்தல்

**EDNA APPLIANCES (Pvt.) Ltd.**

கொழும்பு எட்னா அப்ளையன்ஸஸ் (தனியார்) வரையுள்ளது என்னும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகிய நாங்கள் உங்களுக்கு அவர்களிடமிருந்து நேரடியாக அவர்களால் தயாரித்து இணைக்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களை விநியோகம் செய்கிறோம். குறிப்பாக

கிறிவ்ஸ் **என்பீல்ட்**

இயந்திரத்தின் தொழில்நுட்ப விதிகளுக்கேற்ப அதற்குரிய பம்புகள் அவர்களால் தயாரிக்கப்படுகிறது. கிறிவ்ஸ் என்பீல்ட் இயந்திரத்துடன் பம்புகள் இணைக்கும் நடவடிக்கைகள் கிறிவ்ஸ் என்பீல்ட் நிறுவனத்தால் நேரடியாக மேற்பார்வை செய்யப்படுகின்றது எனவே கிறிவ்ஸ் என்பீல்ட் நிறுவனத்தின் தரம் உறுதி செய்யப்பட்ட என்பீல்ட் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

EDNA APPLIANCES (P.v.t.) Ltd நிறுவனத்தின்
சில்லறை விலைகள்

என்பீல்ட் M.K 12 - ரூபா 16,990
என்பீல்ட் M.K 25 - ரூபா 21,990

**ஏ. எஸ். பொன்னம்பலம் அன்ட் சன்**
176, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(57227)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 — 08 — 1926

மறைவு 02 — 06 — 1998

### திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்

பாசமிகு குடும்பத் தெய்வமே!
எம் தலைவியே!
பண்புடன் எமை வளர்த்த
அன்புத் தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புத்தூர்கிழக்கு, புத்தூர். (57237)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21 — 10 — 1936

இறப்பு 12 — 07 — 1997

அமரர்

### கந்தையா சின்னராசா

திதி: 01 - 07 - 1998

எங்களை வாழ வைத்த அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை என்றும் விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்திபெற நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

துரை வீதி, தாவடி. (55441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## யாழ். மாநகர புதிய மேயர்

யாழ். மாநகர சபையின் புதிய மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரான பொன். சிவபாலன் பதவி ஏற்றுள்ளார்.

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று படையினரின் பலத்த பாதுகாப்புக்களுக்கு மத்தியில் இந்த பதவி ஏற்பு வைபவம் நடந்து முடிந்துள்ளது.

பொன். சிவபாலன் ஒரு சட்டத்தரணி. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளராக கடமை ஆற்றி வருபவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மேயராக இருந்த திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் மே மாதம் நடுப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அவரின் இடத்துக்கே சிவபாலன் தற்பொழுது மேயராகப் பதவி ஏற்றுள்ளார்.

யாழ். மாநகரசபை வரலாற்றிலேயே மிக நெருக்கடியான கட்டத்தில் பதவியேற்றுள்ள பெருமை சிவபாலனையே சாருகின்றது. அவரது துணிச்சல் பாராட்டத்தக்கது.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் மூலம் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர், அரசாங்கம் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தி வந்தது.

பல மாதங்கள் மேற்கொண்ட பிரயாசையின் பின்னரே அரசினால் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒருவாறு நடத்த முடிந்தது.

அதன் விளைவாக உருவாக்கப்பட்டவையே யாழ். மாநகர சபையும் ஏனைய நகர, பிரதேச சபைகளும் ஆகும்.

இப்படி உருவாக்கப்பட்ட அனைத்து உள்ளூராட்சிச் சபைகளுமே உறுப்பினர்கள் முழு அளவில் பதவி ஏற்காத நிலையில் பெயரளவில் இயங்கி வருகின்றன.

யாழ். மாநகர சபையைப் பொறுத்த வரை குடா நாட்டில் யுத்த அழிவுகள் அதிகமாக உள்ள பகுதிகளில் அதுவும் ஒன்று. மாநகர சபைக் கட்டடமே இருந்த இடம் தெரியாது வெட்ட வெளியாகிக் கிடக்கிறது. நல்லூர் இந்து விடுதியில் உள்ள தற்காலிக கட்டடத்தில் அது குறைந்த வசதிகளுடன் இயங்கி வருகிறது.

நகரில் பெரும்பாலான கட்டடங்கள் இன்றும் இடிந்த நிலையிலேயே உள்ளன. மக்களில் பெரும்பாலானவர்கள் வீடுகளை இழந்துள்ளனர். தொழில் இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தகைய நிலையில் நிவாரண வெட்டு ஒரு புறம் மக்களை இக்கட்டான நிலைக்குள் தள்ளி விட்டிருக்கிறது.

பூதாகாரமாக உருவாகி வரும் பிரச்சினைகளால் மக்கள் பொறுமை இழந்து வரும் இன்றைய நிலையில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு முன்னால் உள்ள பொறுப்புக்கள் மலை போன்றவை. சிறுசிறு பணிகளை செய்வது மூலம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விட முடியாது.

எனினும் இன்றைய நிலையில் மேயர் பதவி ஏற்பது மூலமே மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது.

உள்ளூராட்சிச் சபைகளைப் பொறுத்தவரை சகல தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடும் அதுதான்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படும்வரை அது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# ஊனமுற்றோர் இறைவன் படைப்பே
# அவர்களிடமும் திறமைகள் உண்டு

யாழ். ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கத்தினரால் ஊனமுற்றோருக்காக இன்று ஆரம்பிக்கப்படும் வதிவிட பயிற்சியை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஊனமுற்றோரும் இறைவன் படைப்புக்களே. அவர்களிடமும் ஆளுமை, இயலுமை என்பன உண்டு. அங்கவீனம் என்றாலே வாழ்வு முடிந்து விட்டது என்று வாழ்வின் விளிம்புக்குச் சென்ற நிலை மாறி அங்கவீனம் வாழ்வின் முடிவல்ல என்ற தன்னம்பிக்கையுடன் தமது வாழ்வை அமைத்துக் கொண்டு நாட்டுக்கும், சமூகத்திற்கும் சுமையாக இராது தமக்குரிய பங்களிப்பைச் செய்து கொண்டு மற்றவர்களோடு சரிநிகர் சமமாக வாழ முயலும் ஒரு பிரிவினராக நாம் ஊனமுற்றோரை மதிப்பிட முடியும்.

மனிதனின் நேரடிப் பார்வையில் அங்கவீனர் ஒருவரைப் பற்றிய மதிப்பீடு தரக்குறைவானதாக தவறாக இருக்கலாம். உண்மையில் நடைமுறையில் அங்கவீனர் ஒருவரின் செயற்பாட்டினை அவதானிக்கும் போது அவர் சாதாரண மனிதனுக்கு சரிநிகர் சமமாக வேலை செய்வதை — முன்னின்று உழைப்பதை — நாம் அவதானிக்க முடியும்.

இலங்கையில் மிக அண்மைக்காலம் வரை அங்கவீனர் பற்றிய மதிப்பீடுகள் தரக்குறைவானதாகவே இருந்தன.

அவர்களுக்குரிய கல்வி வசதிகள், உரிமைகள், சலுகைகள் மற்றும் வைத்திய வசதிகள் என்பன குறிப்பிடத்தக்களவு விசேடமாக அமையவில்லை.

அங்கவீனர்களை ஆதரிக்க அவர்களது குடும்பத்தினரே சஞ்சலப்பட்டனர். இவ்வாறான இழி நிலையிலிருந்து அங்கவீனர்களை மீட்கும் பணி புத்திஜீவியுள்ள ஒரு சமூகத்தில் வாழும் சகல பிரஜைகளினதும் தலையாய கடமை ஆகும்.

அக்கடமையுணர்ச்சியின் பயனாய் இன்று அங்கவீனர்களைப் பற்றிய சமூக மதிப்பீடுகள் உயர்ந்து காணப்படுகின்றன.

அவர்களுக்கெனப் பாவிக்கப்படும் சொற்பிரயோகங்களும் சிறிது நாகரிகமானதாக அமைந்துள்ளன.

### சொற் பிரயோகம் மாற்றம்

குருடர், செவிடர், ஊமை, நொண்டி என்பதற்குப் பதிலாகச் செவிப்புலனற்றோர், விழிப் புலனற்றோர், வாய் பேச இயலாதோர், வலது குறைந்தோர் போன்ற சொற்பிரயோகங்கள் இப்போது பயன்படுத்தப் படுகின்றன.

இன்று உலக நாடுகள் அனைத்துமே அங்கவீனர் பால் கருணை கொண்டு அவர்களுக்குச் சாதகமான சட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்துச் செயற்படுவதிலிருந்து அங்கவீனர்கள் சமூகத்தில் பெற்றுள்ள சமூக அந்தஸ்து மேலும் பரிணமிக்கின்றது.

**கா. கணேசதாசன்**
செயலாளர்,
யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்.

ஸ்ரீலங்காவும் இதற்கு விதிவிலக்காக அமைந்துவிடாது அங்கவீனர்களுக்கான விசேட உரிமைகளையும், சலுகைகளையும் வழங்க முன்வந்துள்ளமை பாராட்டத் தக்க விடயமாகும்.

குறிப்பாக ஊனமுற்றோர்களுக்கென விசேட கல்வி தொழிற்பயிற்சிக்கூடங்களும் அமைக்கப்பட்டு அவர்களுக்கே உரிய விசேட போதனாமுறைகள் மூலம் கல்வியும் தொழிற் பயிற்சியும் வழங்கப்பட்டு வருவதும் அங்கவீனர்கள் சமூக அந்தஸ்தைப்பெற்று வருவதை நிரூபணம் செய்கின்றது.

இன்று சாதாரண பாடசாலைகளில் கல்வி பயில்வோரும் அங்கவீனர்களும் ஒரே மாதிரியான பரீட்சைக்கு முகம் கொடுக்க முடிகின்றது.

இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விசேட அம்சம் என்னவெனில் சாதாரண பாடசாலைகளில் கல்வி பயில்வோர் வெறும் ஏட்டுக் கல்வியோடு நின்று விடுகின்றனர். ஆனால் ஊனமுற்றோர் தாம் பயிலும் காலத்திலேயே தொழிற்பயிற்சி பெறுவதால் அவர்கள் சாதாரண மாணவர்களை விட ஒருபடி உயர்ந்து தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் முன் நிற்கின்றனர்.

### முன்பு சுமையாக இருந்தவர்கள் நிலையில் மாற்றம்

இதன் மூலம் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் சுமையாக இருந்த அங்கவீனர்கள், இன்று சமூகத்தின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டு அரச தனியார் நிறுவனங்களில் தமக்குரிய உரிமைகளைக் கோரும் நிலைக்கு எழுச்சி பெற்றுள்ளனர்.

பிறப்பால் அங்கவீனர்களாகி விட்டவர்கள் ஒரு புறமிருக்க விபத்துக்களாலும் பயங்கரவாத நடவடிக்கைகளாலும் நிலக்கண்ணிவெடிகளாலும் அங்கவீனர்களாவோர் எண்ணிக்கையும் உலகெங்கும் அதிகரித்து வருகின்றது.

இன்று ஸ்ரீலங்காவில் நிலவும் பயங்கரவாத சூழ்நிலையை அவதானிக்கும் போது எவரும் எந்நேரத்திலும் அங்கவீனர்களாகக் கூடிய பயங்கர சூழ்நிலை உண்டு. பிறப்பினால் அங்கவீனமுற்றோர் பயங்கரவாதம், விபத்துக்களினால் அங்கவீனமுற்றோர் அனைவருமே, அங்கவீனர்'' எனும் வட்டத்திற்குள் வந்து விடுகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் வைத்திய கலாநிதி என். சிவராஜா தலைமையில் ஊனமுற்றோருக்கான பல நற் சேவைகளைச் செய்து வருகின்றது.

ஊனமுற்றோர்களது பிச்சை எடுத்து வாழும் நிலையை மாற்றி அவர்களது எதிர்காலத்தில் அவர்கள் இலகுவான தொழில் வாய்ப்புக்களைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்துடன் இன்று எமது சங்கத்தால் ஆரம்பிக்கப்படுவதே ஊனமுற்றோர் புனர்வாழ்வுப் பராமரிப்பு வதிவிட தொழிற் பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும்.

### பொது மக்களின் ஆதரவு தேவை

ஊனமுற்றோரின் இயலாமையைப் பழிக்காது அவர்களது இயலுமையை, ஆற்றலை, விழுமியங்களைப் பார்த்து அவற்றை வெளிக்கொணர எமது சங்கம் எடுக்கும் பணிகளை நிறைவு செய்ய பொது மக்களின் ஆதரவும் பங்களிப்புகளும் எமக்குத் தேவை.

ஊனமுற்றோர் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வரும் யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துக்கு உங்களது அன்புக்கரங்களை நீட்டுங்கள்.

அதன் மூலம் அங்கவீனர் வாழ்வில் ஏற்படும் மறுமலர்ச்சிக்கு பங்காளியாகி விடுங்கள்.

இறைவன் எம்மை குறையறப் படைத்து விட்டான் என்பதற்கு இறைவனுக்கு நன்றி கூறும் அதேவேளை குறையுடன் படைக்கப்பட்ட அங்கவீனர்களையும் சந்தர்ப்ப வசத்தால் குறையாகி விட்டோரையும் இனிய சொற்களால் அவர்கள் உள்ளம் மகிழ ஆதரியுங்கள்.

★

## கள்ளுத் தவறணை

வரணி இடைக்குறிச்சியில் கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் கடந்த சனிக்கிழமை கள்ளுத்தவறணை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

## ஆங்கில தினவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம். இந்துக்கல்லூரி ஆங்கில மாணவர் மன்றத்தின் ஆங்கில தினவிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (இ-ரீ

# ஆன்ம ஈடேற்றம் அருளும் ஆனி உத்தர நன்னாள்

இன்று ஆனி உத்தர நன்னாள். இந்த நாள் சைவப் பெருமக்களால் விசேஷமாகக் கொண்டாடப்படும் மகிமை வாய்ந்தது.

இந்த நாளில் தான் இறைவன் சிவகாமி அம்பாள் சமேதரராகக் காட்சி கொடுத்து அன்பர்களையும், அடியார்களையும் உய்விக்கும் பொருட்டு திருநடனம் ஆடிய சிறப்பு கைவரப் பெற்றது.

முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் இறைவனின் திருக்கோலத்தைக் காண இந்த ஆனி உத்தரநாளையே தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஈழத்துச் சிதம்பரம் என விளங்கும் காரைநகர்ச் சிவன் கோயிலிலும் இந்த ஆனி உத்தரத் தரிசனத்தை காணலாம்.

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், ஆன்மாக்களின் பொருட்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், முதலான ஐந்தொழில்களும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் எனும் மூர்த்தங்களைக் கொண்டு இயற்றப்படுகின்றன.

''கோயில்'' என்பதற்குச் சிறப்பாக எடுத்துக் கூறும் ஸ்தலம் சிதம்பரம். இந்தச் சிதம்பரத்திலே ஆனி மாத மஹோற்சவம் வெகு சிறப்பாக [illegible] [illegible] சவம் ஆனி உத்தரத்தன்று வரும். இந்நாளில் தில்லை நடராஜனின் தரிசனத்துக்காக அடியார்கள் அதிகாலையிலேயே கூடி விடுவார்கள்.

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அடியார்களுக்கு அருட்காட்சி நல்குவதற்காக எம்பெருமான் ஆனந்த நடனஞ் செய்து வீதியுலா வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தைக் காண்பதற்காக பக்தர்கள் வெள்ளம் போலக் கூடிவிடுவார்கள். ஜன சமுத்திரத்தின் நடுவே எம்பெருமான் நடனமாடி வருவார். இன்றைய ஆனி உத்தர நன்னாளில் அந்தத் தரிசனம் காண்பதற்குப் பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டும். அனுபவித்தவர்களுக்குத்தான அந்த உண்மைபுரியும்.

இந்நாளில் விரதமிருந்து சிவநாமாவளிகளைப் பாராயணஞ் செய்து சிவபெருமானைப் பூஜிப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் அடைவார்கள்.

''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே'' என்பது போல இறைவன் ஆடுகின்றான். நாம் அவனுடைய ஆட்டத்தின் பேரருட் கருணையினால் பூவுலகில் சதுர்வித புருஷார்த்தங்களை அனுபவிக்கின்றோம்.

எனவே இந்தப் பூவுலகில் மானிடப்பிறவி எடுத்த நாம் இந்த ஆனி உத்தர தரிசனத்தைப்பெற்று ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.

குனித்த புருவமும் கொவ்
வைச்செவ்வாயிற் குமிண்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்
போல் மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற் பாதமும் காணப்
பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டு
வதே இம்மாநிலத்தே.

- இராசையா ஸ்ரீதரன்

★

## நாளை

ஆனி - 18
வியாழக்கிழமை
திதி: அட்டமி
பிற்பகல் 02.14 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பிற்பகல் 4.20 வரை.
சுபநேரம் 07.26 - 08.56
ராகுகாலம். 01.26 - 02.56
(பகலுக்கும் இரவுக்கும்
பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்லதொரு புத்தகம் ஒன்றைப்போல் சிறந்த உறவினனும், நண்பனும் இப்பூவுலகில் வேறுயாருமில்லை.

- டியூப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கரலிங்கம் தொடர்பாக மீண்டும் விசாரணைகள்

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1 அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட விசேட ஆணைக்குழு நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தொடர்பாக மேற்கொண்ட சிபார்சுகளை உயர்நீதி மன்றம் நிராகரித்துள்ளதால் ஆணைக்குழு மீண்டும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என சட்டமா அதிபர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

பாஸ்கரலிங்கத்தின் ரிட் மனு தொடர்பாக விசாரித்த உயர் நீதிமன்றம் ஆணைக் குழுவின் சிபார்சுகளையே நிராகரித்துள்ளது எனவும் —

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வலுவிழக்கச் செய்யவில்லை எனவும் — சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

''மூவர் கொண்ட ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளில் இரு ஆணையாளர்கள் மாத்திரமே கைச்சாத்திட்டுள்ளனர்.

இதைக் காரணமாகக் கொண்டே ஆணைக்குழுவின் சிபார்சுகளை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில் ஆணைக் குழுவினர் மூவரும் மீண்டும் கூடி ஏற்கனவே அளிக்கப்பட்ட சாட்சியங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் —

இவ்வாறு செயற்படுவதற்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்போ வேறு சட்டங்களோ தடையாக இருக்காது எனவும் — சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ-10)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 1 சாவகச்சேரி சந்திரசேகர வாரி வனநாத சிவன்கோயில் தீர்த்தத்திருவிழா இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

நாளைமாலை 3.30மணிக்கு திருக்கல்யாண வைபவம் இடம் பெறும்.

(இ-ரி)

★ ★ ★

அல்லாரைதெற்கு மீசாலை அறுகம்புல மகாகணபதிப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(இ-15)

★ ★ ★

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.57 மணிமுதல் உள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

(இ-ரி)

★ ★ ★

மல்லாகம் பழம்பதி திருமுருகன் ஆலயத்திற்கு இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட சிவகாமி, மாணிக்க வாசகர், ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு பிரதிட்சை நடைபெற்றது.

இன்று காலை 5.55மணிக்கு நூதனா பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும் இடம் பெறும். (இ-86)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரியம்மன் கோயில் 'சந்தான கோபாலர் பொங்கல்' இன்று மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளது.

(இ-ரீ)

★ ★ ★

கோண்டாவில் அருள்மிகு சாமுண்டி தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை காலை ஆனி உத்தர நாளில் அஷ்டோத்தர, சங்காபிஷேக பூசை நடைபெறவுள்ளது. (இ)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான சிவன் ஆலயங்கள் —

நடேசர் விக்கிரகம், நாக தம்பிரான் விக்கிரகம் உள்ள ஆலயங்கள் — ஆகியவற்றில் இன்று புதன்கிழமை காலை ஆனி உத்தரப் பூசையும், உதயம் நடேசர்அபிஷேகமும் ஆருத்திரா தரிசனமும் இடம் பெறும்.

சிவன் ஆலயங்களில் தீர்த்தத் திருவிழாவும், பொங்கல், பூசை, ஆராதனை வழிபாடுகளும் நடைபெறும்.

(இ-30)

★ ★ ★

நெடுந்தீவு ஜூலை 1 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் பிள்ளையாருக்கெனப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

(இ-111)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 1 ஊரெழு கிளானைப்பதி அருள்மிகு பர்வதவர்த்தனி என வழங்கும் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் அருள் பாலித்திருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராஜப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகமும், ஆனி உத்தரப் பெருவிழாவும் இன்று நடைபெறும்.

(இ-15)

★ ★ ★

கரணவாய் தெற்கு கப்புதூ நுணுப்பாவளை கந்தசுவாமி கோயில் ஆனி உத்தரத் திருவிழாவும், மணவாளக்கோலமும் இன்றுபுதன்கிழமை நடைபெறவுள்ளன.

இந்த விழாவின் போது ம. கதிரிப்பிள்ளையின் ஆதரவில் காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மாவினால உருவாக்கப்பெற்ற ''வாழ்க்கைக்கு அருணகிரி'' என்னும் நூல் வைத்தியகலாநிதி சி. கதிரைவேற்பிள்ளையினால் வெளியிட்டு வைக்கப்படும்.

(இ-173)

## பரிசில் நாள்

தென்மராட்சி, ஜூலை, 1 சாவகச்சேரி டிறிபேர்க் கலலூரி பரிசில் நாள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் மு. நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக உப வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கோட்டக்கல்வி அலுவலர் இ. கணேசனும் கலந்து கொள்வர்.

(இ-117)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 1 யாழ். கன்னியர் மடம்மகா வித்தியாலயம் நடத்தும் கல்விக் சண்காட்சி இன்றும் நாளையும் பாடசாலை மண்டபத்தில் நடை பெறும்.

(இ-5)

# உள்ளூராட்சி சபைகளுக்கு ரூபா 8 கோடி 50 லட்சம்

யாழ்ப்பாணம், ஜூலை 1 யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிசபைகளில்வேலைத் திட்டங்களுக்கென 8 கோடி 50 லட்சம் ரூபா மதிப்பீட்டுத் திட்டம் ஒன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்களை ஆராய்ந்து அதிகார சபை ஒவ்வொருஉள்ளூராட்சி சபைக்கும் குறிக்கப்பட்ட அளவு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

நிதி ஒதுக்கீட்டு விவரம் வருமாறு;-

★ யாழ். மாநகரசபை ரூபா 1 கோடி 25 லட்சத்து 50 ஆயிரம்.

★ சாவகச்சேரி நகரசபை ரூபா 30 லட்சம்.

★ பருத்தித்துறை நகர சபை ரூபா 30 லட்சம்.

★ வல்வெட்டித்துறை நகர சபை ரூபா 20 லட்சத்து 50 ஆயிரம்.

★ நல்லூர் பிரதேச சபை ரூபா 10 லட்சத்து 95ஆயிரம்.

★ சோப்பாய் பிரதேச சபை ரூபா 10 லட்சத்து 20 ஆயிரம்.

★ உடுவில் பிரதேச சபை ரூபா 20 லட்சம்.

★ சண்டிலிப்பாய் பிரதேச சபை ரூபா 10 லட்சத்து 40 ஆயிரம்.

★ வலி வடக்கு பிரதேச சபை ரூபா 20 லட்சம்.

★ சங்கானைபிரதேசசபை ரூபா 20 லட்சத்து 25ஆயிரம்.

★ வடமராட்சி வடக்கு பிரதேச சபை ரூபா 10 லட்சத்து 11 ஆயிரம்.

★ வடமராசிதெற்குபிரதேச சபை10லட்சத்து 30 ஆயிரம்.

★ சாவகச்சேரி பிரதேச சபை ரூபா 20 லட்சம்.

★ நெடுந்தீவு பிரதேச சபை ரூபா 10 லட்சத்து 25 ஆயிரம்.

★ ஊர்காவற்றுறை பிரதேச சபை ரூபா 12 லட்சத்து 50 ஆயிரம்.

★ வேலணை பிரதேசசபை ரூபா 10 லட்சத்து 60ஆயிரம்.

★ பளை பிரதேச சபை ரூபா 10லட்சத்து 30 ஆயிரம்.

இந்த நிதி உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள சந்தைகள், கால்வாய்கள், வடிகால்கள், மலசலகூடங்கள், வீதிகள், மதகுகள், நீர் விநியோக திட்டங்கள் போன்றவற்றின் புனரமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைக்திட்டங்களுக்கென 2கோடி ரூபா முற்பணமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அணி ஒழுங்கு தெரிவு

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அணி ஒழுங்கு தெரிவு இன்று புதன் பிற்பகல் 4மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் இடம் பெறும்.

பங்கு பற்றும் அணிகள் தமது பிரதிநிதிகளை இந்த அணி ஒழுங்கு தெரிவுக்கு அனுப்பிவைக்கும்படி சென்றலைட் கழக செயலாளர் கோரியுள்ளார். (இ)

## பயணிகள் அவலம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் தர்ளையடி, பளை ஆகிய இடங்களுக்குச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதால் பயணிகள் பலமணி நேரம் வீதிகளில் காத்து நிற்கும் நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

# மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம்நிறுவ நடவடிக்கை

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 25 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ''கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் இன்றைய பிரச்சினைகள்'' என்ற கருத்தரங்கில் பங்கு கொண்ட கடற்றொழிலாளர்களினாலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேற்படி கருத்தரங்குக்கு வருகை தந்த மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் எஸ். ஏ. ஜோசப் கருத்தரங்கின் முடிவில்யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இக் கலந்துரையாடலின் போது வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களின் பிரதிநிதிகள் இணைந்து செயற்படுகின்றனர். ஆனால் யாழ். குடாநாட்டில் கடற்றொழிலாளர்களுக்காக குரல் கொடுக்க ஒரு சமாசத்தை அமைப்பதே எமது நோக்கம்; இதற்கு ஒவ்வொரு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் ஐந்துக்கு மேற்படாமல் பிரதிநிதிகளை நியமித்து எமக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

(இ-ரி)

# எமது கோரிக்கைக்கு சரியான பதில் இல்லாவிடில் போராட்டம் தொடரும்

## உண்ணா விரதத்தை முடித்து வைத்து உரை

யாழ்ப்பாணம், ஜூலை 1 ''எமது உண்ணா விரதப் போராட்டத்துக்கு சரியான பதில் கிடைக்காது விட்டால் ஜூலை மாதம் இதே நாளில் தமிழ் பிரதேசமெங்கும் இத்தகைய போராட்டங்களை விஸ்தரிப்போம்''

இவ்வாறு மனித நீதிக்கான குழுவினரால் நல்லூரில் நடத்தப்பட்ட உண்ணா விரதப் போராட்டத்தை முடித்து வைத்து உரையாற்றிய புளொட் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் செ. கிருபைராசா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். இருதயநாதன் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றும் போது, யாழ். மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரின் நிலை குறித்து அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்தி பல வடிவங்களில் போராட்டங்களை நடத்தி வருகின்றோம்,

எமக்குச் சரியான பதில் கிடைக்க வேண்டும். அது வரையும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டே இருப்போம் என்றார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யாழ். மாவட்ட பொறுப்பாளர் தம்பிராசா சுபத்திரன் உரையாற்றும் போது பயங்கரவாதத்தடைச்சட்டம்கொண்டுவரப்பட்ட ஒரு சில நாள்களிலே யாழ்ப்பாணத்தில் எட்டு இளைஞர்கள் பொலீஸாரினால் கொல்லப்பட்டார்கள். இன்பம், செல்வம் ஆகியோர் கொலை செய்யப்பட்டு பண்ணைக் கடலில் போடப்பட்டதும் இதே நாளில்தான்.

பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமும் இருக்கும்வரை காணாமல் போதலும், கைது செய்யப்படுதலும், மனித உரிமை மீறல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றார்.

கைதானோர், காணாமல் போனோர் சங்கத்தைச் சேர்ந்த எஸ். சற்குணம், திருமதி மீரா அருள்நேசன், தமிழீழ விடுதலை இயக்கப் பிரதிநிதி எஸ். சந்திரசேகரம், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை தலைவர் எஸ். சுந்தரமூர்த்தி, தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதி எஸ். தங்கையன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(இ-5-6)


# கலையகம்

**உயர்கல்வி நிறுவனம்,**

ஆவரங்கால்.

மறைந்த எமது இசையாசிரியை
சங்கீத கலாவித்தகர், இசைக்கலைமணி

**ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்த சர்மா**

B. A. (Lon) Dip. in Ed.

அவர்களின் நினைவாக 4-7-98 சனி மாலை 4.00 மணிக்கு அமைதியான முறையில்

**- பரிசுத்தினம் -**

நிகழவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (O/L 97, A/L 97 மாணவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படவுள்ளதால் பழைய மாணவர்களும் அழைக்கப்படுகின்றனர்.)

(57259)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர் நலன்கருதி

# மின்சார விநியோக நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஓகஸ்ட் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி, இலங்கை மின்சார சபை மின் வழங்கல் நேரத்தில் இன்று முதல் மாற்றங்களைச் செய்துள்ளது.

இன்று தொடக்கம் இரவு 7.30 மணி முதல் இரவு 12.30 மணி வரையும், அதிகாலை 4.30 மணி முதல் காலை 6.30 மணி வரையும் மின்சாரம் வழங்கப்படும்.

மாணவர்களின் நன்மை கருதி இந்த நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும்—

பொது மக்கள் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டும் என்றும் —

இந்த நேரத்தில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவித்தால் மின்சார விநியோக நேரத்தை மேலும் நீடிக்க முடியும் என்றும்—

இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

(இ-5)

## மலேஷியா ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.மாவட்டத்தில் உள்ள மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதியர்களுக்கான கடந்தமாத ஒய்வூதியம் இன்று புதன்கிழமை முதல் வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஒய்வூதியர்கள் தத்தமது வங்கிகளுடன் தொடர்புகொண்டு ஒய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(7-100)





**2000 A/L**

Common Paper

இதழ் - 3

வெளிவந்து விட்டது

(57261)



உ

யாழ். ஈழ நல்லூர்

**அருள்மிகு மூத்தவிநாயகர்**

திருக்கோயில்

1998 ஆம் ஆண்டு

**வெகுதானிய வருஷ பிரம்மோற்சவம்**

01-07-98 புதன்கிழமை இன்று பகல் 11-00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10-07-98 வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும்.

09-07-98 வியாழன் காலை 9-00 மணிக்கு ரதாரோகணம் (தேர்)

மஹோற்சவ பிரதமகுரு

பிரம்மஸ்ரீ தானுவாசுதேவக்குருக்கள்
(சிவாகம கிரியா தத்துவநிதி)
பிள்ளையார் கோயில் கோண்டாவில்.

ஆலயநித்தியகுரு!

பிரம்மஸ்ரீ செ. சுகுமாரசர்மா

சுபம்

(57265) பரிபாலனசபை



செல்லையா மெற்றாஸ்மயில்

நெறியாள்கையில்

**வேழம்படுத்த வீராங்கனை**

(ஆட்ட நாட்டுக்கூத்து)

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபம்

காலம்; 4-7-98 சனிக்கிழமை

மு. ப. 10—12 மணி, பி. ப. 2-4 மணி

இரு காட்சிகள் மாணவர்களுக்கு மட்டும்

5-7-98 ஞாயிற்றுக்கிழமை

மு. ப. 10—12 மணி, பி. ப. 2—4 மணி

இரு காட்சிகள் மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

(57271)



**விக்னா கல்வி நிறுவனம்**

**O/L DAY CLASS**

பிரிவு **5**

ஆரம்பம்: 06-07-98

திங்கள் காலை 8.00—2.00

★ அலகு 1 இல் இருந்து மீட்டல் செய்யப்படும்.

★ இப் பிரிவிற்கு 60 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

★ அனுமதிகளை உடன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(57266)


## சிரார்த்ததின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

அகால மரணமான முன்னாள் யாழ். நகர மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரனின் 45 ஆவது சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்ற சிரார்த்ததின நிகழ்வுகளில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி, புதிய யாழ். நகர மேயர் பொன். சிவபாலன் ஆகியோர் உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(உ-3)

## பயிற்சிநெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

குடும்பநலசேவையாளர்களுக்கான பயிற்சிநெறி இன்று யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் ஆரம்பமாகிறது.

யாழ். மாவட்டத்தில் குடும்பநல சேவையாளர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டையடுத்து இம் முறை 44 பேர் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-139)

## ஜெய்ப்பூர் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்றாகும்.

1987 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், உடலால் ஊனமுற்று மனத்தளவில் முடமாக்கப்பட்டவர்களுக்கு புத்துயிர் அளித்து வரும் அளப்பரிய சேவையை ஆற்றிவருகிறது.

யுத்தத்தினால் கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்துதல், ஊனமுற்றோருக்கு சில்லுக் கதிரை, முச்சக்கரவண்டி ஆகியவற்றை வழங்குதல் ஆகிய பணிகளை இந்த நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

அத்துடன் ஊன்முற்றவர்களுக்கு வாராந்தம் யாழ். போதனாவைத்திய சாலை வைத்திய அதிகாரிகளினால் இயன் மருத்துவ பயிற்சியும் அளித்துவருகின்றது.

இந்நிறுவனத்தின் 11ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி பதினோராவது ஆண்டு நிறைவு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

(இ-ரி)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

''முரண்பாடுகளைத் தீர்த்தல்'' தொடர்பான அறிவூட்டலை வலுப்படுத்தும் கருத்தரங்குகளை பாடசாலை மட்டத்தில், உயர்தர மாணவர்களுக்கு நடத்தும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் திட்டத்தின் கீழ் —

முதலாவது கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

முரண்பாடுகளினால் ஏற்படும் சமூக, கலாசார பின்னடைவுகள், முரண்பாடுகளுக்கான காரணிகள், முரண்பாடுகளற்ற சமூகத்தை உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்கு ஆகிய விடயங்கள் குறித்து இக்கருத்தரங்கில் ஆராயப்படும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான சபா. ஜெயராசா, என். சண்முகலிங்கன், இளைப்பாறிய அதிபர் திருமதி புஷ்பா சின்னையா, ஆசிரியை திருமதி [illegible] யோர் கருத்துரை வழங்குவர்.

(உ-3)


தேசிய இளைஞர் சேவைகள் மன்ற

**யாழ். மாவட்ட அலுவலகம்**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்ட அலுவலகத்தின் (UNODP) நிதியுதவியுடனும்,

வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகாரசபையின் (RRAN) அனுசரணையுடன் நடத்தும்

# தொழிற்றிறன் பயிற்சித் திட்டம்

**பயிற்சி நெறிகளுக்கு ஆட்சேர்த்தலும், பயிற்றுனர் தெரிவும்:**

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் தொலைக்காட்சி-றேடியோ திருத்தும் பயிற்சி, கட்டடங்களுக்கான மின் இணைப்பு பயிற்சி, பெண்களுக்கான ஆடை தயாரிப்பு பயிற்சி ஆகிய துறைகளில் 06 மாத கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளில் பாடசாலையை விட்டு வெளியேறிய 18 வயதிற்கும், 30 வயதிற்கும் இடைப்பட்ட சகல இளைஞர், யுவதிகளும் பங்கு பற்றலாம்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்கள், தே. இ. சே. ம. கூட்டுறவுச் சங்கம் (நிஸ்கோ) அங்கத்துவம் உடையவர்களுக்கு தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும். முதல் இரு பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் க. பொ. த. (சா. த) இல் விஞ்ஞானத்திலும், உயர் தரத்தில் கணிதம், பௌதிகம் ஆகியவற்றில் சாதாரண சித்தியாவது பெற்று இருத்தல் வேண்டும்.

ஆடை தயாரிப்பு பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் ஆகக்குறைந்தது எட்டாம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**றேடியோ / ரி. வி பழுது பார்த்தல்:**

பிரதேச செயலர் பிரிவுகளில்

இப்பயிற்சிகள் கீழ்வரும் இடங்களில் இடம் பெறும்.

1. நல்லூர்
2. கோப்பாய்
3. சங்கானை
4. உடுவில்
5. கரவெட்டி
6. சாவகச்சேரி

**ஆடை தயாரிக்கும் பயிற்சிநெறி**

**பிரதேச செயலர் பிரிவுகளில்**

இப்பயிற்சிகள் கீழ்வரும் இடங்களின் இடம்பெறும்.

1. பருத்தித்துறை
2. நல்லூர்
3. யாழ்ப்பாணம்
4. தெல்லிப்பளை
5. பளை
6. சண்டிலிப்பாய்
7. சங்கானை
8. கோப்பாய்

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்பும் இளைஞர், யுவதிகள் தங்களின் சுய விவரத்துடனான விண்ணப்பப் படிவங்களை வரும் 10-07-1998 ஆம் திகதிக்கு முன்னதாக ''உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், தேசிய வீடமைப்புச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். கடித இடதுபக்க மூலையில் தாம் பயில விரும்பும் பயிற்சி நெறியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பயிற்றுனர்/ போதனாசிரியர்களுக்கான**

## விண்ணப்பம் கோரல்

றேடியோ திருத்துதல், ரி.வி திருத்துதல், வீட்டு மின் இணைப்பு, உடை தயாரித்தல் ஆகிய பயிற்சி நெறிகளைப் போதிப்பதற்காகத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து தனித்தனியே விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றன. இவர்கள் தங்களின் சுயவிவரத்துடனான விண்ணப்பத்தைத் தயாரித்து மாவட்ட அலுவலகத்துக்கு 10-07 1998 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையில் விண்ணப்பிக்கும் துறையைக் குறிப்பிடவும். போதனாசிரியர் தெரிவிற்கான இடமும், காலமும் மாவட்ட அலுவலகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும்.

ரி. சிவதட்சணாமூர்த்தி,
உதவி இயக்குநர்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,
மாவட்ட அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/4152)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கிற்கான சேவையில்

# 6,400 தொன் பொருள் ஏற்றும் பாரிய கப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்துக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வர பாரிய கப்பல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆறாயிரத்து 400 மெற்றிக் தொன் கொள்ளவுள்ள "பிரின்ஸஸ் காஸ்" என்ற இக்கப்பலில் பொருள் ஏற்றும் பணி தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறுகிறது.

இக்கப்பல் பெரிது என்பதால் பருத்தித்துறையில் கரையில் இருந்து 2 மைல் தூரத்தில் வைத்தே அதில் இருந்து பொருள்களை இறக்கவேண்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கே பொருள்கள் ஏற்றிவர 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வரை கொள்ளளவுள்ள கப்பல்களே இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## 2. ஈ. பி. டி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

காலியைச் சேர்ந்த குணசீலன் (வயது 21), திருகோணமலையைச் சேர்ந்த காளிதாஸ் (வயது 28) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் இருவரினதும் சடலங்கள் நேற்று மாலையில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டன.

(உ-31-117-139-15)

## கிழக்கில்,..

(முதலாம் பக்கத் தொடர்)

கள் "எந்த உறுதி மொழியையும் ஏற்கமுடியாது. உடனடியாக நியமனம் வழங்க வேண்டும்" என்று கோரும் மகஜரைக் கையளித்தனர்.

இன்று முதுல் சுழற்சிமுறையில் உண்ணாவிரதம் தொடரும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை—

தாம் தொலை பேசியில் மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவுடன் நேற்றுத் தொடர்பு கொண்டபோது ஜூலை மாத இறுதிக்குள் நியமனம் வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டதாகவும்—

தற்போதுள்ள நிலைமையைக்கருத்தில் கொண்டு நியமனம்வழங்கப்படுவதில்உள்ள காலதாமதத்தைப் பொறுத்துக்கொள்வதென தமது சங்கம் முடிவு செய்துள்ளது என்றும்—

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ந. விஜயசுந்தரம் தெரிவித்துள்ளனர். (உ-3)

## யாழ்...

(முதலாம் பக்கத்தொடர்)

யாழ்ப்பாணத்தில் உள்ள நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள் போன்றோர் தமது கடமைகளைப் பொறுப்பேற்காது விட்டால் தெற்கிலிருந்து ஆள்களைத் தருவித்து அந்த வெற்றிடங்களை நிரப்புதல்—

அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான நீதித்துறை வசதிகள் குடாநாட்டில் செயலிழந்தமைக்கான காரணங்களை சர்வதேச ரீதியில் மனித உரிமை அமைப்புகள் மத்தியில் பிரச்சாரப்படுத்தி எடுத்துரைத்தல்—

போன்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றங்கள் செயலிழந்ததைப் பயன்படுத்தி மக்களின் பிணக்குகளை தீர்க்கும் விடயங்களில் தமிழ் இயக்கங்களும், சில காவல் துறை பிரதிநிதிகளும் தலையிட்டு அநியாயமான முறையில் பணம் கறந்து வருவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று உயர் படை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

(உ)

# காலதாமதமானாலும் யாழ். மாணவர் பல்கலைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை. 1

1997 ஓகஸ்டில் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு முடிவடைந்தபோதும் அதன் பின்னரும் யாழ். மாவட்ட மாணவர்களின் விண்ணப்பங்களை ஏற்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு போதிய அளவு கிடைக்காத காரணத்தால் இவர்களில் பலர் விண்ணப்பம் அனுப்ப முடியாத இக்கட்டு நிலைக்கு தள்ளப்பட்டது தெரிந்ததே. இத்தகையோரின் விண்ணப்பங்களை காலதாமதமானாலும் ஏற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை கேட்டிருந்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது விண்ணப்பங்களை காலதாமதமானாலும் அனுப்பலாம் என்றும்—

அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும்—

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம்—

இதற்கான முந்நூறு விண்ணப்பப் படிவங்கள் இன்று விமான மூலம் இங்கு எடுத்து வரப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

(உ-3)

## 6 பேர் இராஜினாமா

சாவகச்சேரி பிரதேசசபையின் உபதலைவர் உட்பட ஆறு உறுப்பினர்கள் பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இவர்கள் தமது இராஜினாமா தொடர்பான கடிதங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் அனுப்பி வைத்துள்ளனர்.

க. குகதாசன் (உபதலைவர்), கி. ஐயா, மு. மகேசன், மு. சிவபாதசுந்தரம், கி. ரகுநாதன் ஆகியோரே பதவி விலகியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்களாவர். (உ-7)

## களுத்துறை...

(முதலாம் பக்கத்தொடர்)

கொடுத்த வாக்குறுதிகள் சிலவற்றை ஏற்று உண்ணாவிரதம் இருந்த கைதிகள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட இணங்கியதாகக் கூறப்படுகின்றது.

அதையடுத்து கைதிகளுக்கு பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை டக்ளஸ் முடித்து வைத்தார் என்று கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று குறிப்பிட்டது.

உண்ணாவிரதக் கைதிகளுடன் தமது சந்திப்பை முடித்துக் கொண்டு டக்ளஸ் புறப்பட்ட சமயம், களுத்துறைச் சிறையின் 'சி' புளொக்கில் உள்ள மற்றைய சில தமிழ்க் கைதிகள் அவரைச் சந்திக்க விரும்புவதாகத் தகவல் அனுப்பியதாகக் கூறப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து சட்டத்தரணி மகேஸ்வரி சகிதம் 'சி' புளொக் கைதிகளிடம் டக்ளஸ் சென்றார்.

அங்குள்ள 'செல்' ஒன்றுக்குள் கைதிகளைச் சந்திக்க அவர் நுழைந்தார். அங்கிருந்த கைதிகள் ஒரிரு நிமிடங்கள் அவருடன் உரையாடினர். அச்சமயம் கைதிகளில் சிலர் திடீரென அவரைச் சுற்றிவளைத்துத் தாக்கினர் என்று தெரியவந்தது. நீண்ட கூரான இரும்புக் கம்பி போன்ற ஒரு பொருளாலும் கைகள், கால்களாலும் அவர் தாக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவரின் தலையில் மண்டையோடு முடியும் இடத்தில்—பின் கழுத்து ஆரம்பிக்கும் பிரதேசத்தில்—கம்பியால் ஆழமாக குத்தப்பட்டதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில நிமிடநேரத்துக்குள் அவர் மீட்கப்பட்டு காப்பாற்றப்பட்டார் என்றும் தெரிகிறது.

உடனடியாக அருகில் இருந்த நாகொடை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் செல்லப்பட்ட அவர் அங்கு முதலுதவி சிகிச்சைக்குஉட்படுத்தப்பட்டார். அச்சமயம்—நேற்று மாலை 6 மணிக்கு—டக்ளஸ் தேவானந்தா நினைவுடன் இருந்ததாக தெரிகின்றது.

நாகொடை ஆஸ்பத்திரியில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட டக்ளஸ்வழியில் நினைவிழந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றிரவு 8-20 மணியளவில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் உடனடியாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் அவசர சத்திர சிகிச்சை அறைக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டார். நேற்றிரவு பத்து மணியளவில் அவருக்கு தலையில் சத்திர சிகிச்சை ஆரம்பமானது.

மண்டையோட்டின் முடிவில் பின்கழுத்துப் புறத்தில் ஆழமாக ஏற்பட்டுள்ள குத்துக் காயம் குறித்தே டாக்டர்கள் கவலை தெரிவித்ததாகத் தெரிகின்றது.

இரும்புக் கம்பியால் ஏற்பட்ட அடி மற்றும் கீறல் காயங்கள் அவரின் உடலில் ஏனைய பகுதிகளில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

டக்ளஸ் தேவானந்தா ஆஸ்பத்திரியில் நேற்றிரவு சேர்க்கப்பட்ட சமயம் அவரின் நிலை கவலைக்கிடம் என ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

எனினும் சத்திரசிகிச்சைப் பணியில் ஈடுபட்டிருக்கும் டாக்டர்கள் வேறு விதமாகக் கருத்து வெளியிட்டனர்.

"அவரின் நிலை ஸ்திரமாக ($table) உள்ளது. ஏனைய விவரங்களை சத்திரசிகிச்சையின் பின்னரே கூறலாம்" — என்றார்கள் அவர்கள்.

### டக்ளஸின் மூளையில் இரத்தப் பெருக்கு

இத்தாக்குதலினால் டக்ளஸின் மூளைப்பகுதியில் இரத்தப் பெருக்கு ஏற்பட்டிருப்பதாகவும் —

சத்திர சிகிச்சைக்கு இடையே, மூளைப் பகுதியில் வெளியேறியிருக்கும் இரத்தத்தை உறிஞ்சி அகற்றும் முயற்சி எடுக்கப்படும் என்றும்—

வைத்திய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மண்டையோட்டில் சத்திர சிகிச்சை செய்து திறந்து, அதன் மூலமே மூளையில் குருதிப் பெருக்கால் தேங்கி நிற்கும் இரத்தத்தை அகற்ற முடியும் என்றும்—

அதற்கான முயற்சியே நாள்ளிரவில் நடைபெறுவதாகவும்—

தனியார் ஒளிபரப்புச் சேவை ஒன்றின் செய்தியாளர் ஒருவர் இன்று அதிகாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றிரவு 10 மணியளவில் ஆரம்பமான சத்திரசிகிச்சை இன்று அதிகாலை வரைநீடிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

டக்ளஸுடன் சிறைக்குள் சென்ற அவரின் உதவியாளர் ஒருவரும் தாக்கப்பட்டதாகவும்—

அவ்வேளை சூட்டுச் சத்தம் ஒன்றும் கேட்டதாகவும்—

சில தகவல்கள் தெரிவித்த போதிலும் அவற்றை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

### சட்டத்தரணியை ஏசினர்

டக்ளஸுடன் சென்ற சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேலாயுதம் மீது தாக்குதல் ஏதும் இடம் பெறவில்லை. டக்ளஸைத் தாக்கியோர்அவரைத் தாறுமாறாக ஏசியதாகக் கூறப்பட்டது.

டக்ளஸ் தாக்கப்பட்டு கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டது பற்றிய தகவல்கிடைத்ததும் முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதையபோக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சருமான பௌஸி, ஆளும் கட்சி எம். பியான வாசுதேவ நாணயக்கார. ஐ. தே. கட்சியின் எம். பியான ஜெயலத் ஜெயவர்த்தனா, புளொட் அமைப்பின் தலைவரும் எம். பியுமான ரி. சித்தார்த்தன் ஆகியோர் ஆஸ்பத்திரிக்கு விரைந்து டக்ளஸின் நலன்களைக் கவனித்தனர்.

(உ-3-6-10)


# சுப்பஸோ வீடியோ ஸ்தாபனத்தாரின் இன்னுமோர் அங்கம்தான் சுப்பஸோ கலர்படச்சேவை

இன்றைய நவீன யுகத்தில் எண்ணற்ற பெரும் சண்டுபிடிப்புகள் உலகளாவிய ரீதியில் உலா வந்து கொண்டிருக்கின்றது.

நம் ஊர் மக்களின் அபிலாஷையை — இன்னோரன்ன தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக நவீன கொம்பியூட்டர் (1997 ஆம் ஆண்டு வெளியான) மெஷினை யாழ்ப்பாணத்துக்கு தருவித்து சகல மக்களின் நீண்டகால அவல நிலையை போக்கும் சேவையாக அறிமுகம் செய்துள்ள சேவைதான் — சுப்பஸோ கலர்ப்படச் சேவை நீங்கள் இன்றெடுத்த விழா வைபவங்களை இன்றே பார்த்து இன்புற சுப்ப ஸோ கலர்ப்படச்சேவையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

★ (தற்போது சகல அளவுகளிலும் PAPER கைவசம் உள்ளது என்பதையும், அண்மையில் உலக சந்தையில் அறிமுகமான முதல்தர GOLDEN DRAGON PAPER இலும் படங்களை பிரதியாக்கம் செய்து வழங்குகின்றோம். என்பதையும் மிக்க மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்)

உங்கள் கலர்ப்படச்சுருள்களை- உயரிய தரம் வாய்ந்ததாக கழுவிப் பெற்றுக்கொள்ள இன்று யாழ்ப்பாணத்தில்

சுப்பஸோ - கலர்ப்படச்சேவை - சுப்பஸோ - கலர்லாப்

ஆயிரம் கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை. இதே போல் உண்மைகள் ஒரு போதும் உறங்காது.

முற்றத்து முல்லைக்கு வாசமில்லை - என்பார்கள் மூடர்கள்...

முற்றத்து முல்லையும் வாசம் வீசும் என்பதை யாழ்ப்பாணத்தில் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள்

சுப்பஸோ - ஸ்தாபனத்தார் கொம்பியூட்டர் மெஷின் மூலம்.

உங்கள் கலர்ப்படச்சுருள்களுடன் இன்று வருமாறும் நாளை படமாக பெற்றுச் செல்லுமாறும் உங்களை வரவேற்கின்றார்கள்

சுப்பஸோ - கலர்ப்படச் சேவை ஸ்தாபனத்தார்

## சுப்பஸோ வீடியோ
## சுப்பஸோ - கலர்படச் சேவை
## சுப்பஸோ கலர்லாப்

மூன்றும் ஒரே இடத்தில்....

100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எங்கள் திறமையை நீங்களும் பரீட்சித்துப் பார்க்க கொழும்பில் கழுவிய Negative ஐ எமது லாப் மூலமும் பிரதியாக்கம் செய்து பாருங்களேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.